JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-1  Witness
for Prosecution

| CC.No. | 418/2025 | Crime No. | 23/2025 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw.1-ஹரீஷ்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.01.2025 ஆம் தேதியன்று நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் மதுவிலக்கு குற்றத்தடுப்பு ரோந்து அலுவலாக ஆப்பக்கூடல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சந்திரசேகர் என்பவருடன் நானும், காவலர் நாகராஜன் என்பவரும் நிலையம் விட்டு புறப்பட்டு ஆப்பக்கூடல், நால்ரோடு, விஜயா காலனி, ஒரிச்சேரி புதூர் ஆகிய பகுதிகளில் ரோந்து செய்து கண்காணித்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் தளவாய்பேட்டை, பூரணி சிக்ன் கடை அருகில் உள்ள முட்புதரில் கண்காணித்தபோது அங்கு ஒரு நபர் கையில் பையுடன் நின்றிருந்தவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது தனது பெயர் முகவரியை ஆறுமுகம், வயது 48, த/பெ.சுப்பிரமணியம், 251 A / 158 வினோபா நகர், தளவாய்பேட்டை, ஒரிச்சேரி, பவானி வட்டம் என கூறினார். அவர் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்த போது அதில் 180 ml அளவுள்ள பிராந்தியுடன் கூடிய Express Brandy பாட்டில்கள் 8 இருந்தது. மேற்படி நபரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி சுயலாபம் கருதி மேற்படி பிராந்தி பாட்டில்களை விற்பனை செய்ய வைத்திருந்ததாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். எனவே எதிரியை உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி கைது செய்வதற்கான காரணத்தை கூறி காலை 08.30 மணிக்கு கைது செய்தும், குற்றத் தடுப்பு இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் காலை 08.45 மணிக்கு மேற்படி பிராந்தி பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்துல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.20 06:06:15 +0530

என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. Express Brandy பாட்டில்கள் 8 எண்ணிக்கை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து ஆப்பக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.23/2025 சட்டப்பிரிவு 4(1)(a) TNP Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். எதிரி ஆறுமுகம் என்பவரை பார்த்தால் அடையாளம் தெரியும். அவர் இன்று ஆஜராகியுள்ள ஆஜர் எதிரி தான். சாட்சி எதிரியைஅடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறார். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க, நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவயிடமானது தளவாய் பேட்டை மெயின் ரோடு என்றால், சரிதான். எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் பையை கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நாங்கள் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசரில் மது பாட்டில்களின் மதிப்பு குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நாங்கள் கண்காணித்து கொண்டிருந்தபோது எதிரி யாருக்கும் மதுபானம் விற்கவில்லை என்றால், சரிதான் உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்காக புள்ளிவிவரக் கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ஆஜர் எதிரியிடமிருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.20 06:06:24 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani